



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்தில் 2025–2026ம் ஆண்டு கலைஞர் சுளவு இல்லம் திட்டத்தின் மூலம், 59 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான பணி ஆணை உத்தரவு வழங்கும் நிகழ்ச்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. உத்திரமேரூர் தொகுதி எம்.எல்.ஏ.வும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளருமான க.சுந்தர் கலந்து கொண்டு, 59 பயனாளிகளுக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ஞானசேகரன், குமார், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் சசிகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் சூர்யா, மாவட்ட கவுன்சிலர்கள் பத்மா முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் பானுமதி, சூர்யா ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், தி.மு.க. கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அனைவருக்கும் வீடுகள் வழங்கக்கூடிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

*திண்டுக்கல், ஜூன் 14-*

தமிழகத்தில் வாழும் அனைவருக்கும் வீடுகள் வழங்கக்கூடிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என்று ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 22 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 431 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லத்திற்கான ஆணையை ஐ.பெரியசாமி வழங்கினார். 8 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு 2 லட்சம் வீடுகள் பூர்த்தியடைந்து 1 லட்சம் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு உள்ளது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 22 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 431 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லத்திற்கான ஆணை வழங்கும் விழா ஜெய்னி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமை தாங்கினார். திண்டுக்கல் எம்.பி.ஆர்.சச்சிதானந்தம்,



உதவி ஆட்சியர் மருத்துவர் வினோதினி, கோட்டாட்சியர் சக்திவேல், முன்னாள் மாவட்ட குழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராமன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் தட்சிணாமூர்த்தி வரவேற்று பேசினார்.

விழாவில் 431 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்ட பணிக்கான ஆணையை வழங்கிவிட்டு பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி இந்தியாவிலேயே வரலாறு காணாத அளவிற்கு தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகிறது. கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மூலம் 8 லட்சம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு 2 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்திற்கான இது வரை 1 லட்சம் பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இன்று ஆத்தூர் ஒன்றியத்தில் மட்டும் 431 பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் வீடுகள் இல்லாதவர் யாருமில்லை என்ற நிலை உருவாகி வருகிறது. அதற்கு காரணம் மக்களுக்கான மக்களாட்சி செய்து வரும் திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களே என்றார்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலை தமிழகத்தில் உருவாகி வருகிறது. அனைத்து நலத்திட்டங்களும் இல்லம் தேடி செல்கிறது. கிராமப் புற சாலைகள் மேம்பட்டு வருவதால் போக்குவரத்து மட்டுமின்றி கிராமங்களில் உள்ளவருக்கு அனைத்து வசதியும் கிடைத்து வருகிறது. பிரதம மந்திரி மேம்பாட்டு சாலை ஒரு சில இடங்களில் சேதமடைந்துள்ளது. அவற்றையும் சரிசெய்ய உத்தரவிடப்பட்டு விரைவில் அதற்கான பணிகள் நடைபெற உள்ளது. இது தவிர மகளிர் உரிமைத்தொகை கிடைக்காதவர்கள் அருகில் உள்ள கட்சி நிர்வாகிகளிடமோ உள்ளாட்சி பிரதிநிதியிடமோ மனுக்களை கொடுங்கள். அவர்கள் மூலம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனு சென்று விரைவில் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கும் என்றார்.

அதன் பின்னர் நிருபர் மத்தியில் பேசிய அமைச்சர் இ.பெரியசாமி தமிழகத்தில் மட்டும் தான்; பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும், கல்லூரி செல்லும் மாணவர்களுக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வருவதால் இந்தியாவிலேயே உயர்கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள மாநிலம் தமிழகம் என்ற பெருமையை பெற்றுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல் முருகன், மாவட்ட தகவல் தொழில்நுட் அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மனலூர் மணிகண்டன், நிறைவாக வட்டார வளர்ச்சி அலுவலர் ஆத்தூர் முருகன் நன்றி கூறினார்.



திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு செம்மொழி நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா செவ்வாப்பேட்டையில் ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக அமைப்பு துணை செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ, சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களுக்கு மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். உடன் மாவட்ட நிர்வாகிகள் வி.ஜெ.ஜெசீனிவாசன், தொழுவூர் பா.நரேஷ்குமார் காஞ்சனா சுதாகர், ரமேஷ், ராஜா, மகேஸ்வரி பாலவிநாயகம், எ.குட்டி(எ) பக்தவச்சலு, சேகர், திலிப்ராஜ், இமானுவேல், அன்பு (எ) ஆல்பர்ட், வி.உதயகுமார், செந்தில்குமார், தியாகராஜன், ப.குமரேசன், வழக்கறிஞர் வ.ஹரி, தாஸ் (எ) நாராயணசாமி, எட்வின், கசுவா ராஜி இம்ரான், ஆனந்த், ராஜ், சதீஷ்குமார், கௌதம், சுரேஷ் பாபு, பாலாஜி, சிவலிங்கம், செல்வி ஜீவா, ஆதவன், மோகன லட்சுமி, குமுதா, பூர்ணிமா, புனிதவதி, இந்துமதி, மதுமிதா, நிர்மலா, தமிழ்வாணன், அன்பு, துரைராஜ், சக்திவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# நான்கு சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!

*கடலூர், ஜூன் 14 -*

கழக தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் (எனது) தலைமையில் தொகுதி பொறுப்பாளர்கள் முன்னிலையில் இன்று 14062025 சனிக்கிழமை கடலூர் மேற்கு மாவட்டத்தில்



உள்ள திட்டக்குடி, விருத்தாசலம், பண்ருட்டி, நெய்வேலி ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கீழ்கண்ட விவரப்படி நடைபெறுகிறது.

அதன் விவரம் கீழ் வருமாறு : 1. திட்டக்குடி சட்டமன்ற தொகுதி காலை: 10 மணி ஜி.வி.மஹால் மங்களூர். 2. விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி காலை: 11.30 மணி சிவபூஜா திருமண மண்டபம் விருத்தாசலம். 3. பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி மாலை: 3 மணி வி.வி.எம். மஹால் லிங் ரோடு பண்ருட்டி. 4. நெய்வேலி சட்டமன்ற தொகுதி மாலை: 5.00 மணி தொ.மு.ச. அலுவலகம் நெய்வேலி. ஆகிய இடங்களில் நடைபெறுகிறதுஅது சமயம் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய , நகர, பேரூர், கழக நிர்வாகிகள், மாவட்ட பிரிதிநிதி கள் அனைவரும் கூட்டத் தில் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.





